1973 பிப்ரவரி 7]

புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளவும், இந்திய அரசுக்குத் தகவல்களை அனுப்புவது பற்றியும், அவருக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஹாண்டே தம் கேள்வியைப் போட விரும்பவில்லை. ஆகவே அடுத்த கேள்விகள் 57, 58 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : திரு. சௌந்தரபாண்டியன் கேட்டிருக்கிற புலிகள் வாழ் காடுகளில் எத்தனை புலிகள் இருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போதைய கணக்கு புலிகள் 29, சிறுத்தைப் புலிகள் 28.

Crash programme for transport service.

* 59 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Government have drawn up a crash programme for the city transport service and express bus service; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மாநகரப் பேருந்துப் பணியினை மேம்படுத்த, 23 பேருந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. தவிரவும் நெரிசல் நேரத்தில் பேருந்துகளை அதிக எண்ணிக்கையில் விடுவது, நெரிசல் நேரத்தின்போது பேருந்து (நிலையத்தில்) நிற்கும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் கால அட்டவணைகளை மாற்றி அமைப்பது ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை, 1971 அக்டோபர் முதல் 1971 டிசம்பர் வரை உள்ள கால அளவில் விரைவுத் திட்டத்தின்கீழ் 75 பேருந்துகள் கட்டப்பட்டன. இவற்றில், 17 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடுவதற்காகவும், 58 பேருந்துகள் பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாகவும் கட்டப்பட்டன.

[1973 பிப்ரவரி 7

திரு. என். கே. பழனிசாமி : சார், மாலை நேரங்களில் பஸ்களில் ஏற்படக் கூடிய நெரிசலைத் தவிர்க்க மற்ற ரூட்களில் பஸ்களை விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதா? ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக நெரிசல் நேரங்களில், கூடுதலான பஸ்களை விடுவதன் மூலமும் மாற்று வழித் தடங்களை விடுவதன்மூலமும் அதேபோல் விரைவுப் பேருந்துகளை மாநகரத்திற்குள்ளே விடுவதன் மூலமும் ஓரளவுக்கு நெரிசலைக் குறைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பட்டினத்திலிருக்கிற நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஒரு சிறப்பான திட்டத்தை புரபொசர் ஐயாசாமி அவர்கள் தந்திருந்தார்களே அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்களா? அது எப்பொழுது அமுலுக்கு வரும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களை உள்ளடக்கிய போக்குவரத்து ஆலோசனைக் குழுவிலே அவை பரிசீலிக்கப்பட்டு, சில பரிந்துரைகள் ஏற்று கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவிலே இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை நகரைப் பொறுத்த வரையில், விரிவான முறையிலே போாசிரியர் ஐயாசாமி கொடுத்த திட்டத்திலே இந்த ஒரு பகுதி எப்பொழுது அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல, விரைவில் என்று சொன்னால், மே மாதத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்கிற நிலைமையிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனியார் பஸ்களிலே ஒருவர் அதிகமானால்கூட, ஓவர்லோடு என்று நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் அரசாங்க பஸ்களிலே ஒன்றுக்கு மூன்று பங்கு ஆட்கள்

1973 பிப்ரவரி 7]

ஏறி, வெளியே எல்லாம் தொங்கிக் கொண்டு போகிறார்கள். இப்படி ஓவர்லோடு இருக்கிற அரசாங்க பஸ்களின்மீது நடவடிக்கை எடுப்பதில்லையா? அல்லது அரசாங்க பஸ்களில் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறலாம் என்பது சட்டமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓவர்லோடு ஏறுவது தவிர்க்கப்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. குறிப்பாக, சென்னை போன்ற பெரிய நகரங்களில் நம்முடைய நாட்டிலே மட்டுமல்லாமல், உலகெங்கும் இந்நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்க ஒரு சிறந்த வழி என்னவென்றால், அண்டர்கிரவுண்டு டிரெயின்-ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் போடுவதுதான். ஆகையினாலே அதுவரையிலே நெரிசல் நேரங்களிலே கஷ்டம்தான் இருக்கும். கூடுதலான பஸ்களை விட்டுவிடலாம். ஆனால், அதனால் போக்குவரத்திலே நெரிசல் ஏற்படலாம். அந்த நேரங்களில், பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிற்கக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். ஆகவே, இதையெல்லாம் விரிவாக ஆராய்ந்து மத்திய அரசும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினை இது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் சென்னைக்கு ஒரு ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் அமைய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது ஒன்று தான் இதற்கு சிறந்த வழியாக அமையும்.

Special buses for school children.

* 60 *Q.*—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Transport Corporation in Madras City and elsewhere to run childrens' specials; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) ஆம். 10—7—1972 முதல், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து (எட்டாம் வகுப்பிலும் அதற்குக் கீழும் படிக்கின்ற) பள்ளிக் குழந்தைகளுக்காக மட்டும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வேளைக்கு 15 பயணத் தடவைகளில் சிறப்புப் பேருந்துகளைச் சோதனை முறையில் பல்லவா போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது.